Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022　மார்கழி 14　(29 · 12 1991)　ஞாயிற்றுக்கிழமை　ஓசை: 314

## உணவுக்காக தலா 40 சதம் போருக்காக 17.40 சதம்

யுத்தம் ஆரம்பித்த பின்னர் வட-கிழக்கு மாகாணத்திற்கு இதுவரை 51 கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இத்தகவலை வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களாக யுத்தம் நடைபெற்றுவரும் 23 இலட்சம் மக்களைக் கொண்ட பிரதேசத்திற்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் இப்பொருட்களை அனுப்பிவைத்துள்ளது. நாளொன்றுக்குச் (4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு: மேற்குலகம் அரசிடம் வற்புறுத்து

## உதவி பாதிப்படையலாமென அழுத்தம்

(கொழும்பு)

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் காணுமாறு மேற்குலகநாடுகள், குறிப்பாக சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்தி வருவதாக கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. இந்த அழுத்தம் காரணமாகவே, அமைச்சர் தொண்டமானின் சமரசமுயற்சிக்கு பிரேமதாசா அரசாங்கம் மறைமுகமான ஆதரவு காட்டிவருவதாக இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அரசியல் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படும் பட்சத்திலேயே மேற்குலகம் சிறிலங்காவுக்கு கடனுதவி வழங்குவதாக தீர்மானித்திருக்கிறது. எதிர்வரும் பெப்ரவரிமாதம் நடுப்பகுதியில் சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் பாரிஸ் நகரில் கூடி கடனுதவிபற்றி முடிவு எடுக்க உள்ளன.

இதன் காரணமாகவே அமைச்சர் தொண்டமானின் சமரச முயற்சிக்கு அரசாங்கம் மறைமுகமாக ஊக்குவிப்பதுடன் மௌனமும் சாதித்து வருகிறது.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவப் பாதை மூலம் தீர்வு காண முடியாது என்பதை மேற்கத்தைய நாடுகள் நம்புவதாகவும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது பெரிய அளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறலாம் என்பதனாலும் இந்நாடுகள் அரசியல் தீர்வை வற்புறுத்துவதாக தெரியவருகிறது.

## கிராமங்கள் சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் திடீரென கிராமங்களைச் சுற்றிவளைக்கும் இராணுவத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத்திற்கு இந்தியா மறைமுக உதவி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு இந்தியா மறைமுகமாக ஒத்துழைத்துவருவதாக நேற்றிரவு வெரித்தாஸ் வானொலியின் உண்மையின் எண்ணங்கள் பகுதியில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் வெகுவாக ஒடுக்கியுள்ளதன் மூலம் இந்தியா இதனைச்செய்வதாகவும், இந்தியா தற்போது இஸ்ரேல் பக்கம் சாய்ந்தும், சீனா போன்ற நாடுகளுடன் இணைந்தும் செயற்பட முனைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தீர்விற்கெதிராக சிங்களவரை அணிதிரட்ட புதிய அமைப்பு

சிறிலங்காவின் நிலப் பகுதியைப் பாதுகாக்கும் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு முன்னாள்

...வர்களே. எனவே எந்த அரசுக்கு அமைதித் திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்பது தெளிவாக இல்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு

தமிழ் பகுதிக்குத் தன்னாட்சி அதிகாரம், நிலத்தின்மீது அதிகாரம், அந்நிய உதவியை நேரடியாகப் பெறல், புலிகளை பொலிஸ் துறையில் சேர்த்துக் கொள்ளப்படுவது போன்ற

கடனுதவி வழங்குவதாக தீர் மானித்திருக்கிறது. எதிர்வரும் பெப்ரவரிமாதப் நடுப்பகுதியில் சிறிலங்காவுக்கு உதவி வழங் கும் நாடுகள் பாரிஸ் நகரில்

மறைமுகமாக ஊக்குவிப்பது டன் மௌனமும் சாதித்து வருகிறது.

தமிழர் பிரச்சினைக்கு இரா ணுவப் பாதை மூலம் தீர்வு காண முடியாது என்பதை

பெரிய அளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை என் பதனாலும் இந்நாடுகள் அர சியல் தீர்வை வற்புறுத்துவ தாக தெரியவருகிறது.

# தொண்டாவின் தீர்வுதிட்டம்; ஜனாதிபதியின் நிலை என்ன?

## — பௌத்த சங்கம் கேள்வி

(கொழும்பு)

இனப் பிரச்சினை தொடர் பாக எஸ். தொண்டமான் முன் வைத்துள்ள முப்பதி ரெண்டு ஆலோசனைகள் அட ங்கிய திட்டம் இன உணர்ச்சி யைத் தூண்டி விடக் கூடியது. இதனால் ஏற்படப் போகும் விளைவுகள் பற்றித் தெரியாத நிலையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உள்ளாரா? இவ் வாறு லோக சாசன சம்மே ளனத்தின் செயலாளர் வண. தர்மிட்டிப்பொல ரெட்ணசார தேரோ கேள்வி எழுப்பியுள் ளார்.

வண. ரெட்ணசார தேரோ வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில், இனப்பிரச் சினை தொடர்பாக 32 ஆலோ சனைகள் அடங்கிய திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து, அது தொடர்பாகப் பேச்சுவார் த்தை நடத்த எஸ். தொண்ட மன் யாழ்ப்பாணம் போக உள்ளார். இதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளாரா என்பதைத் தெரிந்துகொள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு இணைப்பு; சோனகர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் இணை ந்த தமிழர் தாயகம் என்ற எண்ணக் கருவை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு அகில இலங்கை சோனகர் சங்கம் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன் றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், வடக் கிற்கும், கிழக்கிற்கும் தனித் தனியே இரண்டு மாகாண சபைகள் அமைய வேண்டும் இன, மத அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்ளக் கூடாது. இன வாதக் கட்சிகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும்,

மாகாண அமைச்சுகளின் சட்டவாக்க அதிகாரத்துக்கு மேலாக மத்திய அரசின் அதி காரங்கள் அமைய வேண்டும். முக்கிய துறைகளான பாது காப்பு ஆயுதப் படைகள், வெளியுறவு, துறை முகங்கள், விமான நிலையங் கள், பாரிய காணி நீர்ப்பாசன வேலைகள், வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு முதலீடு அரசசார்பற்ற நிறுவனங்க ளின் செயற்பாடு ஆகியவற் றில் மத்திய அரசின் அதிகா ரம் முதன்மையாக இருக்க வேண்டும் என்றும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### அசோகா

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலின்போது கடந்த ஆக ஸ்ட் ஐந்தாம் திகதியன்று காயமடைந்து சிகிச்சை பெற் றுவந்த அசோகா (இந்திர குமாரி சிவகுரு, புலோலி மேற்கு, பருத்தித்துறை) என் பவர் நேற்றுக் காலை வீரச் சாவைத் தழுவிக் கொண்டுள் ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத் தியுள்ளனர்.

# புலிகள் - இராணுவம் வெல்லாவெளியில் மோதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் ரோந்து சென்ற இராணு வத்தினருக்கும் விடுதலைப் புலி களுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகசிறி லங்கா இராணுவ வட்டாரங் கள் தெரிவித்துள்ளன. நேற் றையதினம் வெல்லாவெளிக் கும், கோயில் போரதீவுப் பகு திக்கும் இடையே இந்தச் சண்டை இடம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் நிலப் பகுதி யைப் பாதுகாக்கும் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு முன்னாள் அமைச்சர் காமினி ஜெயசூரி யாவினால் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இந்த அமைப்பா னது பெரும்பான்மையினரின் (சிங்களவர்) நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்கும் என்றும், அதேவேளை எல்லா இலங்கை மக்களுக்கும் சமத்து வம், சமஉரிமை பெறப்பாடு படும் என்று காமினி தெரிவித் துள்ளார் என்றும் பி. பி. ஸி. அறிவித்தது.

சிங்கள தேசிய வாதம் பேசு வோருடன் பெரும்பாலான பௌத்தமதக் குழுக்களும் சேர்ந்துள்ளன. இவர்களும் தொண்டமானின் சமாதானத் திட்டத்தை தூக்கிஎறியுமாறு கோருகின்றன. சிங்களவரின் அதிகமானோர் போர் நின் றால்போதும் என்று நினைப் பவர்களே. எனவே எந்த அள வுக்கு அமைதித் திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்பது தெளி வாக இல்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் அமைச்சர் எஸ் தொண்டமான் சமர்ப் பித்துள்ள சமாதானத் திட் டத்திற்கு சிங்களவர் மத்தியில் எதிர்ப்பு வளர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் பகுதிக்குத் தன்னா ட்சி அதிகாரம், நிலத்தின்மீது அதிகாரம், அந்நிய உதவியை நேரடியாகப் பெறல், புலிகள் பொலிஸ் துறையில் சேர்த்துக் கொள்ளப்படுவது போன்ற தொண்டமானின் ஆலோச னைகளுக்கு சிங்களத் தேசிய வாதிகளின் எதிர்ப்பு கடுமை யாக இருப்பதாக பி.பி. ஸி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மடு அகதிமுகாமில் பெரும் இட நெருக்கடி

(மன்னார்)

வவுனியா மாவட்டத்தில் தொடரும் இராணுவ நடவ டிக்கைகளையடுத்து மடு அக திகள் முகாமில் நெருக்கடி ஏற்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

வவுனியாவின் எல்லைப் பகு தித் தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள் மீது இராணுவத் தினர் மேற்கொள்ளும் எறி கணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து மக்கள் இடம் பெயர்ந்து மடு அகதிகள் முகா மிற்குச் சென்றுள்ளனர். ஏற் கனவே இருபத்து எட்டாயி ரத்திற்குமதிகமான மக்கள் தங்கியுள்ள மடு அகதிகள் முகாமில் குடிநீர்த் தட்டுப் பாடு, இடவசதியின்மை, மழை போன்றவற்றால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி யிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறின. மேலும் முகாம் பகுதியில் வயிற்றோட்டம், மலேரியா, வாந்திபேதி, நெருப்புக் காய்ச் சல் போன்ற நோய்கள் பரவி யிருப்பதாகவும், ஏற்ற மருந் துகள் இன்மையால் மக்கள் சிரமப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

# 'கறுப்புநரி' நடவடிக்கை புலிகளுக்கு எதிரானதல்ல

## - இராணுவத்தின் புதிய விளக்கம்

(கொழும்பு)

நத்தார் பண்டிகையன்று படையினரால்மேற்கொள்ளப் பட்ட 'கறுப்பு நரி' (பிளாக் ஃபொக்ஸ்) இராணுவ நடவ டிக்கை விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தல்லவாம். இது வவுனியா மாவட்டத்தில் நெளுக்குளத் தில் வதியும் தமிழ் மக்களுக் காக நெளுக்குளம் மகாவித்தி யாலயத்தில் அகதிமுகாம் ஒன்றை அமைப்பதற்கான

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதான வீதிக்கு அப்பால் புலிகளின் ஆதிக்கமே

## - கிழக்கு நிலைபற்றி புரண்ட்லைன் செய்தியாளர்

(சென்னை)

கிழக்கு மாகாணத்தின் மட் டக்களப்புப்பகுதியில் பிரதான வீதிகளில் மிகக்குறுகிய இடை வெளியில் சிறிலங்கா இராணுவ முகாம்கள் காணப்படுகின்ற போதிலும், பிரதானவீதிகளில் இருந்து சற்றுத்தொலைவில் விடுதலைப் புலிகளைக் காண முடிகின்றது. இவ்வாறு சென் னையில் இருந்து வெளிவரும் புரண்ட்லைன் என்ற சஞ்சிகை யில் டி. எஸ்.சுப்பிரமணியம் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் அவர் கூறுகையில்,

மட்டக்களப்புநகரில் பதற்ற மும், பயமும்கூடிய அமைதியே நிலவுவதாகவும், அங்குள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

## பொதுக்கூட்டம்

இடம்:- புதிய விஞ்ஞான கல்விக்கழகம்.
யாழ்ப்பாணம் (எழிலகம் முன்பாக)

காலம்;- 30-12-91 காலை 10 மணி

92 ஆம் ஆண்டின் நடைமுறைகள் பற்றி செரிக்கப்பட வுள்ளமையால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரவும். இக்கூட்டத்தில் வி.பு.ம.மு உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

குறிப்பு: சகலகோட்ட நிர்வாகிகளும் 9.00 மணிக்கு தவறாது சமுகந்தரவும்.

(R/2053) -பொதுச்செயலாளர்

## வருடாந்தப் பொதுக்கூட்ட
## அறிவித்தல்

யாழ்மாவட்டப் பிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் 5.1.1992 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கூட்டத்திற்கு வண்டி உரிமையாளர்கள் மட்டும் சங்கத்தால் வழங்கப்பட்ட அறிமுக அட்டையுடன் தவறாது சமுகந் தருமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நன்றி

செயலாளர்
முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச்சங்கம்
யாழ்ப்பாணம்

முக்கியகுறிப்பு:

இதுவரை சங்கத்தில் பதிவு செய்யாது சேவையாற்றும் முச்சக்கர மோட்டார் வண்டி உரிமையாளர்கள் 4.1.1992 க்கு முன்பாக தங்களது அங்கத்துவத்தை பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(R/2042)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், (வ.உ)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
பொதுமுகாமையாளர் தரம் II (101/8)
பதவி வெற்றிடம்

## என்னுடன் இரண்டு நிமிடம்



### மேஜர் வீமன்

ஓ ... ...
வீமனா?
நீ தானே அன்று ... ...
காட்டிற்கு ஒரு
தலைவனாய்;
இன வேட்டையை எதிர்க்க
வீரனாய்;
வீட்டிற்கு ஒரு புலியாய்!
மலையாற்றிலே ... ...
பல சாதனைகள் செய்தது
நீதானே!

மறந்து
விட்டுச் சொல்கிறாயா?
உன்
மோட்டார் சைக்கிளில்
என்ன
எத்தனை தடைகளை
வீழ்த்தி இருப்பாய்!
அப்போது ... ...
எனது காயங்களையும்!
மோட்டார் சைக்கிளின்
காயங்களையும்

ஏன்!
உனது காயங்களையும்
கூட!
இங்கேயே உருமறைத்திருந்
தோம்!

அதற்கு
வழிகாட்டிய - நீ
என்னைப் பிரியும் போது!
எனக்கு ஏற்படும் மனக்
காயங்களை
ஏனோ
மறைக்கச் சொல்கிறாய்
ஓ ... ...
மறந்து விட்டேன்?
உன்னை!

ஓடியதும் எனக்குத்
தெரியும்!
ஏனென்றால்!
இங்கு!
உன் பெயர் சொல்கிறதே
ஒரு - டொமினோ!
ஆனால் ... ...
உனக்குத் தெரியுமா?
நான் எங்கு தேடியும்
கிடைக்கவில்லை - உன்
பல வினத்தை என்று!
ஆம் ... ...
அத்தனை சாதனைகளும்
செய்த நீ
கூட்டிச் சென்று
விட்டாயாமே?
விளங்க வில்லையா?
என் நண்பர்கள்!
பசிலனையும், நிக்சனையும்!
அவர்களுடன்!
மனோ, சேனையும்!
உன்னுடன் கூட்டிச்சென்று
விட்டாயாமே?
அப்படி இல்லையா
அப்படியானால்!
அவர்களை கூட்டிச்
சென்ற - நீ
ஏமாற்றிய போது!
என்னை விட்டுவிட்டு
அவர்களுடன் சென்று
விட்டாயா
இப்போது தானே
-புரிகின்றது!
பாசத்தின் பிணைப்பு
என்னுடன் மட்டுமல்ல
எங்கெல்லாம் இருக்கின்றது
என்று!

## 43-ம் நாள் நினைவஞ்சலி



### ந. ரகுதராஜன்

தோற்றம் 02-03-1974 | மறைவு 17-11-1991

வயாவிளான் மண்ணில் மலர்ந்த ரகுதராஜன்
வளமிகு நந்தாவில் தடாகமதில் நீராடி நிமலன்
தயாவான தாயடி சென்றடைந்தான் தாரணியில்
தன்பேர் நிலைத்திடத் தற்போதன் பக்கமதில்
சிரிக்கின்றானே

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு.

தந்தை, தாய், சகோதர, சகோதரிகள்
(R/2052)

நினைவு கூருகின்றோம்...



1991 - 12 - 29

லெப். கிறிஸ்ரி

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், (வ.உ)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## பொதுமுகாமையாளர் தரம் II (101/8)

# பதவி வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து யாழ் மாவட்டத்திற்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமை
(அ) கூட்டுறவுப் பணியாளர் 9-வது சம்பளத்திட்டதில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழிநுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 1 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்) க.பொ.த உயர் தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழிநுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

2. வயதெல்லை - 25 - 40 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)
3. சம்பளத்திட்டம் 101/8 ரூபா 1005 — 1705
40x5 — 50x10

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

4. சங்க தொழிற்பாடுகளுக்குள் வசிப்பவர், ப.நோ.கூ. சங்கத்தில் அனுபவம் மிக்க விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 14-1-92 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக "தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ, அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

17-12-91

தலைவர்
புலோலி ப.நோ.கூ. சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

(B/3702)

எனக்கு ஏற்படும் மனக்
காயங்களை
எங்கே
மறைக்கச் சொல்கிறாய்
ஓ ... ...
மறந்து விட்டேன்?
உன்னை!
இப்போதெல்லாம்
மேஜர் வீமன் என்கிறார்
களே
அது ஏன்?
மதிகெட்ட எதிரிக்கு - நீ
புகட்டிய புத்திமதியும்!
எம் - மண்மீட்பிற்கான
இந்தயாக வேள்வியில்-உன்
திறமைகளை!
தலைவன் சுருக்கச்சொல்லி
விட்டானோ?
மேஜர் வீமன் என்று!
அப்படியானால் நன்று!

எனக்குத் தெரியும் - உன்
பலத்தை!
அதைக் கண்டு - எதிரி!
ஆயுதங்களை வீசி விட்டு
...
இப்போது தானே
-புரிகின்றது!
பாசத்தின் பிணைப்பு
என்னுடன் மட்டுமல்ல
எமக்கெல்லாம்இருக்கின்றது
என்று!

இத்தனைபாசம் கொண்ட
- நீ
சாதனைகளைப் புரிந்து
விட்டு
வேதனைகளை மட்டும்
- ஏன்
தந்து விட்டுச் சென்றாய்!
இப்போது!
எம் கானகத்தினுள்!
எங்கு பார்த்தாலும்;
உன் பெயர்!
மீண்டும் ஒரு முறை
சந்திப்பாயானால்!
இங்குள்ள
உள்ளக் குமுறல்களை
உனக்குச் சொல்லி!
பரிகாரம் பெறுவேன்!

[R/2044]

மணலாறு - இளமாறன்

# உபவிதி திருத்தம்

1991.12.22 இல் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. உபவிதி 7 (4) — சங்க உறுப்பினருரிமை பெறுவதற்கான பிரவேசக் கட்டணத்தை ரூபா 1.00 இலிருந்து ரூபா 10.00 ஆக அதிகரிப்பது;
2. உபவிதி 15 (1) — பங்குத் தொகை ஒன்றின் விலையை ரூபா 10.00 இலிருந்து ரூபா 100.00 ஆக அதிகரிப்பது.

எனவே அங்கத்தவர்கள் அனைவரையும் 1992.01.14 ந் திகதிக்கு முன்னர் மிகுதிப்பணத்தை செலுத்தி முழு உறுப்பினருரிமையை உறுதிப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[B/3700]

# 1991 - 12 - 29



## லெப். கிறிஸ்ரி

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி, இரணைமடுக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய
அன்சார் (கனகரத்தினம் தெய்வேந்திரராசா - வட்டக்கச்சி கிளிநொச்சி)

திருக்கோணமலை கோபாலபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஆட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 3 குழந்தைகள், 3 பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்.

1986 ஆம் ஆண்டு பரந்தனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
லெப். கிறிஸ்ரி (சீனித்தேவர் சேசிமுத்து 20, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
ஜக்சன் (சிவபுண்ணியம் ஜெயச்சந்திரன் - வதிரி கரவெட்டி வடக்கு)

1988 ஆம் ஆண்டு குடும்பிமலையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய
தீபன் (கிருஷ்ணபிள்ளை சதாசிவம் - ஐயன்கேணி, ஏறாவூர், மட்டக்களப்பு)
தயான் (ஆரையம்பதி, மட்டக்களப்பு)

செனையூரில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய
கப்டன் ரவி (வடிவேல் நாகேஸ்வரன் - 6 ஆம் வட்டாரம், செனையூர், மட்டக்களப்பு)

யாழ். சுன்னாகத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மூதாட்டி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ நேற்றைய நினைவுகூருகிறோம் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட படத்தில் பாலா என்பதற்குப் பதிலாக மைக்கல் எனத் தவறாகப் பிரசுரமாகியுள்ளது.

விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

(B/3697)

# போதிய உணவு இல்லை; வருவாய்க்குத் தொழிலில்லை;

## கிழக்கு அகதி முகாமில் தமிழர் அவதி

''அகதி முகாம்களில் வாழும் நாங்கள் மிகப்பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறோம். போதிய உணவுப் பொருட்கள் இல்லை, வேலை இல்லை எல்லா உத்தியோகத்தர்களாலும் பாதிக்கப்படுகின்றோம்'' இவ்வாறு மட்டக்களப்பு நகரிலுள்ள அகதி முகாமில் வாழும் ஒருவர் புரண்ட்லைன் பத்திரிகை நிருபருக்கு தகவல் தருகையில் தெரிவித்துள்ளார் அவர் மேலும் கூறுகையில் இந்த நிலையில் இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப இந்திய அரசு எடுத்துள்ள தீர்மானத்தையும் கண்டித்தார்.

சவுக்கடி கிராமத்தில் நாற்பத்தியெட்டுப் பேரை முஸ்லிம் ஊர்காவற் படையினரும், அதிரடிப்படையினரும் கொன்றொழித்ததாக கூறிய இன்னுமொருவர், ''மீன்பிடிக்க கடலுக்கு செல்லமுடியாதுள்ளது. எமக்கு வேறு தொழில் தெரியாது. எமக்கு உடைகள் இல்லை அரசாங்கம் நிவாரணத்தில் எமக்கு மரக்கறிகள் எதுவும் தருவதில்லை. தேங்காயும், வெங்காயமும் கூட விலைக்குத்தான் வாங்க வேண்டியுள்ளது நாம் மீண்டும் சவுக்கடிக்குச் செல்லவிருக்கிறோம் ஆனால் முஸ்லிம்களிடமிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது எனக் கூறினார்.

நகர ஊர்காவல் படையும், இராணுவத்தினரும், முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக மட்டுமே செயற்படுகின்றனர். பொலீஸ் திணைக்களத்தில் கடமை புரியும் தமிழர்களுக்கு கூட ஆயுதம் எதுவும் வழங்கப்படுவதில்லை என மற்றுமொருவர் கட்டுரையாளருக்கு தகவல் அளித்துள்ளார்.

## இடம் பெயர்ந்தோருக்கு வைத்திய நிலையம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான வைத்திய சிகிச்சை நிலையமொன்று நாளை மு.ப. 10-30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் திறந்து வைக்கப்பட உள்ளது

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து முகாம்களில் இருப்போரும், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்போரும் இச் சிகிச்சைநிலையத்தில் வைத்திய வசதிகளை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது

## கைலாசபதி கலை அரங்கில் நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மெய்யியல் வட்ட ஆதரவில் கிளிநொச்சி கல்வித்திணைக்கள கழகவின் மன்றத்தின் ... சிறிமலர்கள் நடிக்கும் நாடகங்கள் இன்று இடம்பெறும்.

''ஞாயிறு போற்றுதும்'' ''நிஜமான கதைகேளு'' என்ற இந்த இரு நாடகங்களும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 10 மணிக்கும் மாலை 8 00 மணிக்கும் நடைபெற உள்ளன

வடக்கு-கிழக்கு

அனைத்து இனங்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் தரப்பட வேண்டும். அதேவேளை நாட்டின் இறைமையும், ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும். மாகாண சபைகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் போது ஓர் அடிப்படையிலான கோரிக்கைகளை ஏற்று எல்லை நிர்ணயம் செய்யக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டாவின்

நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு என்றும்,

தொண்டமானின் ஆலோசனைகள் பற்றி ஜனாதிபதி தெளிவான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும். தொண்டமானின் ஆலோசனைகள் நாடு இரண்டாகப் பிளவுபட வழி செய்வதோடு, வடக்கில் தமிழீழம் அமையவும் உதவும். முக்கியத்துவம் வாய்ந்த தொண்டமானின் யாழ்ப்பாணப் பயணம் குறித்துப் பௌத்த சங்கமும், நாட்டை நேசிக்கும் மக்களும் மௌனமாக இருக்கமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவளவிழா

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் பவளவிழாவும் பரிசளிப்பு வைபவமும் மலர் வெளியீடும் தை மாத இறுதியில் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தலைவர். திரு. எஸ் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள்

டனரும் சமூக விரோதிகளும் பலர்களும் நூற்றுக்கணக்கானோரை கைதுசெய்து வருவதாகத் தெரிகிறது. கடந்த ஒரு வார காலமாக இந்த வகைய திடீர் சுற்றி வளைப்புக்களும், கைதுகளும் இடம்பெறுவதாகவும் தெரிகிறது.

கறுப்புநரி

சமாதான நடவடிக்கையாகும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நெடுங்குளம் மகா வித்தியாலயத்தில் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டு 305 அகதிகள் தங்கியிருப்பதாகவும் இராணுவ அறிக்கை தெரிவிக்கின்றது. வவுனியா அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் இந்தமுகாம் இயங்குகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைநெல்லுக்குளம் சந்தியிலும், சுற்றுப் புறக்கிராமங்களிலுமுள்ள மக்கள் மடு முகாமுக்கு இடம் பெயர்ந்துள்ளதாகவும் கூட்டுப்படைகளின் தலைமையகம் தெரிவிக்கிறது.

உலக இராணுவ வரலாற்றில் ஆக்கிரமிப்புப்படை ஒன்று சமாதான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது இதுதான் முதற் தடவை என்று சொல்லப்படுகிறது.

தீர்விற்கெதிராக

நேற்றிரவு மேலும் தெரிவித்தது.

இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வதியும் மற்றச் சமூகத்தினருக்குப் பாதுகாப்பு வழங்கிய போதிலும் சிங்களத் தேசியவாதிகள் இதனை எதிர்க்கின்றனர்.

இடதுசாரிக் கட்சியான நவசமசமாஜக்கட்சி நேற்றமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் அமைதித் தீர்வை எதிர்ப்பவர்களைக் குறை கூறியுள்ளது. எது எவ்வாறாயினும் அமைச்சர் தொண்டமான் புலிகளுடன் பேச யாழ்ப்பாணம் விஜயம் செய்யப்போவது உறுதியாகத் தோன்றுகிறது. அமைச்சர் எஸ் தொண்டமான் இதுதன் சொந்தமுயற்சியென்றுசொல்லிய போதிலும், ஜனாதிபதி இதன் பின்னால் நிற்கிறார் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

## பொது அறிவுத் தேர்வு; ஆசிரியர் கருத்தரங்கு

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வு தொடர்பாக தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தமிழ், சமூகக்கல்வி, விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இக்கருத்தரங்கில் ஒரு பாடசாலையிலிருந்து மேற்படி பகுதிகளில் ஒரு ஆசிரியர்வீதம் குறைந்தது மூவரை அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிக் கோட்டத்தில் நாளை [30 - 12 - 91] காலை 9·00 மணிக்கு பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி கோவில், உடுத்துறை ஆகிய கொத்தணிகளுக்கு யா/மெதடிஸ் பெண்கள் கல்லூரி பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 1 00 மணிக்கு கரவெட்டி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய கொத்தணிகளுக்கு யா/நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும் கருத்தரங்கு நடைபெற உள்ளது.

பிரதான

மக்களில் அநேகர் தமது அபிப்பிராயத்தை வெளிப்படையாக வெளியிடத் தயங்குகின்ற போதிலும் கூட விடுதலைப்புலிகளுக்குப் பெருமளவு ஆதரவிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் பிரசன்னத்தை வெளிப்படுத்தக் கூடிய தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெறுவதையும், விடுதலைப்புலிகள் சட்டுசன யோகக்கிராமங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றமையையும் டி. எல். எல். சுட்டிக்காட்டியுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

சிறுப்பிட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை 28-12-91 அதிகாலை சிவபதமடைந்தார். அன்னார் இளவாலையைச் சேர்ந்த கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் (முன்னைநாள் சட்ட வைத்திய அதிகாரி யாழ். போதனா வைத்தியசாலை - பேராசிரியர், மருத்துவபீடம் மலேசியாப் பல்கலைக்கழகம்) திருமதி செ. விஜயலக்சுமி, டாக்டர் சி. சதாசிவம் (கிராமிய வைத்தியசாலை கட்டுக்கோட்டை), திரு. சி. செல்வரத்தினம் (பதவி நிலை உத்தியோகத்தர், உருக்குக் கூட்டுத்தாபனம், அத்துருகிரிய) திருமதி கு சரஸ்வதி, திருமதி த. திலகவதி, திருமதி மா. சிவயோகம் (லண்டன்). திருமதி ந. சரோஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சு. சாந்தகுமாரி (மலேசியா), திரு ந. செல்வராசா (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), திருமதி ச. சர்வேஸ்வரி, திருமதி செ. பத்மினி (ஹொரான் கம்பனி கொழும்பு), திரு. வை. குணரத்தினம் (வட்டாரக் ஆசிரியர் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), திரு. சு. துரைராசா (பெரும்பாக உத்தியோகத்தர், சமநல சேவைப் பகுதி சாவகச்சேரி கைதடி), திரு தி. ராஜ் சுரவிங்கம் (லண்டன்), திரு செ நடராசபதி (படவரைஞர் சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி அ. சோதிமுத்து, திரு. சீ. திருநாவுக்கரசு, திரு. சீ கிருஷ்ணமூர்த்தி. திரு. சீ. கனகசபை (இளைப்பாறிய ஆசிரியர்). திரு. சீ. சுப்பிரமணியம், வைத்திய கலாநிதி - நவரத்தினம் (லண்டன்), திரு சீ. கந்தசாமி (பொறியியலாளர் அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசன் (மலேசியா), திருமதி பாலாம்பிகை (லண்டன்) சுதாசினி (மலேசியா), திருமதி கமலினி (சுவிற்சர்லாந்து), திருமதி விமலினி (கனடா), சுவாஜினி, தேவேந்திரன், சர்சினி, ஐங்கரன், சங்கரன், நிருபா, கிருபாகரன், விக்கினேஸ்வரன் (கொழும்பு), குமரேஸ்வரன் (கொழும்பு) பிரபாகரன் (இந்தியா), பிரமிளா, பவானி, கலைவாணி, தரங்கினி ஆகியோரின் பேர்த்தியும், யோதீசன் (கனடா), பிரியங்கா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-12-91 நேற்று சித்தங்கேணியில் நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சித்தங்கேணி.
28-12-91
[R/2051]

தகவல்:
டாக்டர் சி சதாசிவம்.
(மகன்)

உணவுக்காக

சராசரியாக ஒருவருக்கு அத்தியாவசியப் பொருள்களுக்காக 40 சதம் செலவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1992 இற்கு பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி நாளொன்றுக்கு 4 கோடி ரூபாவாகும். ஆளொன்றுக்கு ஒரு நாளுக்கு 17 ரூபா 40 சதமாகும்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
29 - 04 - 60

வீரச் சாவு ;
29 - 12 - 85

### வீரவேங்கை அன்சார்
### (கனகரத்தினம் தெய்வேந்திரராசா)

தமிழினத்தின் விடிவிற்காய்
தரணியிலே பிறந்தாய் நீ
தலைவனது வழியினிலே
தயங்காது சென்றாய் நீ
தாயகத்தை மீட்டிடவே
தாய் மண்ணில் துயின்றாய் நீ

140, கட்சன் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

நின் பணி தொடரும்
அன்புத் தம்பி

(R/2054)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.